# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 158 — 1975 අප්‍රේල් 04 වැනි සිකුරාදා — 1975.04.04

158 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் | — | விலைக் கட்டளைகள் | 198 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 193 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுகள் | — |
| நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 198 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 194 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 196 | | |


## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 162*

இல. டி 21/ஆர்.ஈ.சி.ரி/763

**தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணையமர்வு துறத்தல்**

தரைப்படையின் நிரந்தரப்படையைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் 1975, ஏப்பிறல் 01 ஆம் தேதி முதல் அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளார்.

லெஃவ்ரினன்ற் கேணல் தேவமுல்லகே தேவப்பிரிய திலக் பெரேரா, இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணி.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975, மாச்சு 25 ஆம் தேதி.

4-104—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

*1975 இன் இல. 163*

இல. டி/வி. எவ்/62(பி)

**தரைப்படை—இலங். தொ. ப—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற மாற்றுச்சேவை முடிவுறுதல்**

இலங்கைத் தொண்டர் படையைச் சேர்ந்த கீழ்க் குறிப்பிட்டுள்ள அலுவலரின், நிரந்தரப்படைச் சேவையிலான மாற்றுச் சேவை 1975, மார்ச்சு 31 ஆம் தேதி முதல் முடிவுறும்.

கப்ரின் நோர்மன் அலன் சிமித்;. என். எஸ். ஆர்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975, மார்ச்சு 20 ஆம் தேதி.

4-1—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 164*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

கொழும்பு 5, வய்வ் றோட் இல. 49/1 ஏ ல் வசிக்கும் மொஹமட் கரீம் மொஹமட் ஹம்சா அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக, பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/15—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 165*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

துனகஹ, பல்லியபிட்டியில் வசிக்கும் செல்வி ரன்பட்டிதேவகே அனுலா இந்திரசிறி அவர்கள் நீர்கொழும்பு, த குறூஸ் றோட், இல. 23 ல் பிரதான அலுவலகத்திலும், பல்லியபிட்டி இல. 140 ல் மேலதிக அலுவலகத்திலும் நீர்கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மார்ச்சு 17.

4-101/10—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 166*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

முணசிங்க ஆரச்சில்லாகே றொபட் முனசிங்க அவர்கள் எட்டியாந்தோட்டை பிரதான அலுவலகத்திலும் கித்துல்கல மேலதிக அலுவலகத்திலும் அவிசாவலே நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1975 மாச்சு 17,
கொழும்பு 1,

4-101/9—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 167*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

களுத்துறை தெற்கு, மஹஹீனட்டியன்கலயில் வசிக்கும் மக்ஸ்வெல் பராகிரம பறணகம அவர்கள் களுத்துறை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1.
1975 மாச்சு 17.

4-101/16—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 168*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

அளுத்கம, காவி வீதி "வீரகிரி" யில் வசிக்கும் துனுசிங்க எட்வின் த சில்வா அவர்கள் பேருவலை, மெயின் வீதியில் அலுவலகத்திலும் களுத்துறை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/11—04.04.75 ந் தேதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 169*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

களுத்துறை தெற்கு, கங்கபட றோட், இல. 16 ல் வசிக்கும் செல்வி யஸ்மின் சாவித்திரி ராமசந்திர விவாகத்திற்குமுன் த சொய்சா அவர்கள் களுத்துறை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/17—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 170*

ஜே/0227/இ

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

த்வுன்டசேகர முதியன்சேலாகே டிங்கிரிபண்டா திகல அவர்கள் கெலிஓய வீ. சி. இல. 12 ல் பிரதான அலுவலகத்தில் கண்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/13—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

*1975 இன் இல. 171*

*நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)*

குறுல்லன்மடுவே கெதற சிறிசேன அவர்கள் தென்னேகும்புறே இல. 167/5 ல் வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் கண்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/8—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

1975 இன் இல. 172

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

வனிகசூரிய முதியன்சேலாகே தோனதுங்க பத்ரா பத்மகுமாரி வனிகசூரிய அவர்கள் மொறகொல்லாகம பிரதான அலுவலகத்திலும் மஹ அம்போகம மேலதிக அலுவலகத்திலும் மாகோ நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/4—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 173

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

வன்சாவல, ஹப்பாவன, கொஸ்துவவில் வசிக்கும் கலியனந்த திறணகம அவர்கள் காலி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

5-101/3—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 174

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

அம்பலாங்கொட வில்மட் பிரேமதுங்க அவர்கள் பறகஹதொட்ட பிரதான அலுவலகத்திலும் வத்துகெதற மேலதிக அலுவலகத்திலும் பலபிட்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மார்ச்சு 17.

4-101/7—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 175

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

எல்பிட்டியில் வசிக்கும் ஹந்துன்நெத்தி ரூலன்ட் த சில்வா அவர்கள் பலப்பிட்டி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கிலம்; சிங்களம் ஆகிய மொழிகளில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/2—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 176

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

நந்ததாச ஹேவாபட்டகே அவர்கள் வெலிகம, ஹெட்டி வீதி, பிரதான அலுவலகத்திலும் மாத்தறை மேலதிக அலுவலகத்திலும் மாத்தறை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/6—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 177

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மல்லாகத்தில் வசிக்கும் இரத்தினசிங்கம் யோசப் செல்வரத்தினம் அவர்கள் மல்லாகம், நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/1—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 178

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

ரூகான் பாலித சுபசிங்க அவர்கள் கேகாலை பிரதான அலுவலகத்திலும் கேகாலை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1.
1975 மாச்சு 17.

4-101/12—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

1975 இன் இல. 179

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கிரிபண்டார விஜயசுந்தர அவர்கள் கேகாலை பிரதான அலுவலகத்திலும் கேகாலை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4-101/5—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பீ. 7/63

*1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் 6(1) (V) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 6 (1) (V) ஆம் பிரிவின்படி, எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர் நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின் பேரில், இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள பொறுப்பு முயற்சிக்கு மேற்குறிக்கப்பட்ட பிரிவு பொருந்துமென இக்கட்டளையின் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.*

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1975, மார்ச்சு 21.

அட்டவணை

யால சவாரி பீச் ஹொட்டேல் லிமிட்டெட்டால் நடாத்தப்படும் யால சவாரி பீச் ஹொட்டேல், யால.

4–72/1—04 04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

எல். டி.—பீ. 7/63

*1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் 6(1) (VI) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 6(1) (VI) ஆம் பிரிவின்படி, எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, நிதி அமைச்சர் நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின் பேரில், முன்னே கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (V) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள தான யால சவாரி பீச் ஹொட்டேல் லிமிட்டெட்டின் உபயோகத்திற்கு, கட்டிடங்களை ஏற்பாடு செய்வதற்கு, பலத்துப் பன்ன யால வில் என். வைத்திலிங்கம் அன்ட் கம்பனி லிமிட்டெட்டால் நடாத்தப்படும் பொறுப்பு முயற்சியை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1975, மார்ச்சு 21.

4–72/2—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

கட்டளை இல. 42

*1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்*

*57 ம் பிரிவின் கீழ் கட்டளை*

*1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர், மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால் உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக் கட்டளையால் அங்கீகரிக்கின்றேன்.*

மை. சேனநாயக்க,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள்
அமைச்சர்.

இல. பி/13/70(43) சி.ஈ.சிடபிள்யு/எல்எ/8
கொழும்பு, 1975.03.14.

அட்டவணை

இலங்கைத்தீவின் மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் மாகொல கிராமத்தின் களனி மாவட்ட அதிகாரியின் பகுதியில் உள்ள கொஸ்கஹவத்த அல்லது தெல்கஹவத்தை என்னும் காணியின் ஒரு பகுதியான 0ஏ. 0றூ. 6 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித் துண்டுகள் :

வடக்கு—மாகொல-உடுப்பில பிரதான பாதை ;

கிழக்கு—அதே காணியின் எஞ்சிய பகுதி ;

தெற்கு—அதே காணியின் எஞ்சிய பகுதி ;

மேற்கு—வண்டிப் பாதை.

உரிமை கொண்டாடுபவர் : திரு. டீ. ஆர். பி. கருணாரத்ன, மாவரமண்டிய, மாகொல, சியம்பலாபே.

4–103—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பதுளை நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள பதுளை, மஹியங்கனை றோட் இல. 56 ஏ ல் வசிக்கும் பாலசிங்கம் பாலராமன் அவர்கள், மேற்படி நீதிபரிபாலன மாவட்டத்துக்குள் தமிழ்மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குப் பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

டீ. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன,
பொது நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

கொழும்பு 1,
1975 மாச்சு 17.

4–101/4—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

(1) இலங்கை அரசியலமைப்பின் 118 (1), 120 (2) பிரிவுகளுடன் இணைத்து வாசிக்கப்படுகின்ற 119 (1), 120 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பண்பினுல் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர், மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய நான், இதன் கீழ் காணப்படும் அட்டவணையின் I வது நிரலில் குறித்த தத்துவங்களை அங்கு II வது நிரலில் காட்டப்பட்டிருக்கும் திணைக்களங்களைச் சேர்ந்த அரச அலுவலர்கள் சம்பந்தமாக அங்கு III வது நேரொத்த நிரலில் குறிப்பிட்ட அரச அலுவலர்களுக்கு கீழ் குறிப்பிட்டதற்கிணங்க கையளிக்கிறேன்.

(i) அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களை அவர்களினுல் திணைக்களத் தலைவரின் பொதுப் பணிப்பின் கீழும் இலங்கைத் தாபனச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்ட நடைமுறைக்கும் மற்றும் மந்திரி சபையால் அல்லது என்னுல் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு எல்லாவித எடுத்துரைகளுக்கும் அமைவாக செயல்படுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் கீழ் கையளிக்கிறேன்.

(ii) அரசியலமைப்பின் 119 (1) ஆம் 120 (3) ஆம் பிரிவுகளின் பிரகாரம் என்னுல் எவ்விடயத்திலும் தீர்மானிக்கப்படும் வேலை நீக்கம் அல்லது பிற தண்டனை அல்லது இடமாற்றம் ஆகியவற்றிற்குரிய எந்தத் தத்துவத்தையும் அத்தகைய தத்துவம் கையளிக்கப்பட்ட அரச அலுவலர் பிரயோகிக்காது என்னுலேயே பிரயோகிக்கப்படல் வேண்டும்.

### அட்டவணை

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| (1) திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 க்கு குறைவான சம்பளம் பெறும் அரச அலுவலர் ஒருவருடைய (இணைந்த சேவைகள் ஒன்றிலேனும் சேராத அலுவலர்கள் தவிர்ந்த) இடைநிறுத்தம், வேலை நீக்கம் அல்லது வேறு ஏதாவது தண்டனை வழங்குதல் சம்பந்தமான தத்துவங்கள் | நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைச்சின் அலுவலகம் | செயலாளர், மேலதிக செயலாளர் |
| | அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்கள் (பிராதேசிய சிவில் ஆட்புல பகுதி தவிர்ந்த) | திணைக்கள அதிபர் |
| | பிராதேசிய சிவில் ஆட்புல பகுதி .. | வேலைகள் பணிப்பாளர் |
| (2) திரட்டிய சம்பள அளவுத்திட்டத்தில் ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 க்கு குறைந்த சம்பளம் பெறும் அரச அலுவலர்கள் சார்பாக (இணைந்த சேவைகள் ஒன்றிலேனும் சேராத அலுவலர்கள் தவிர்ந்த) கடும் கண்டனம் அல்லது கண்டனம் அல்லது ஒரு வாரச் சம்பளத்திற்கு மேற்படாத அபராதத்தினுல் தண்டித்தல், சம்பள ஏற்றத்தை இடைநிறுத்தல், நிறுத்தல், குறைத்தல், அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு பின்போடல் அல்லது அலுவலர் சம்பந்தமாக திணைக்கள் மூலமாக அரச அங்கீகரிக்கப்பட்ட சிறிய தண்டனைகளை வழங்குதல் | நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சின் அலுவலகம் | சிரேஷ்ட உதவிச் செயலாளர், ஆளணி நிர்வாகம் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர், உதவிச் செயலாளர் |
| | நீர்ப்பாசனத் திணைக்களம் .. | பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் (பரிபாலனம்) பரிபாலன உத்தியோகத்தர் பரிபாலன உதவியாளர், கணக்காளர், பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், விசேட தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர், பொறிமுறைப் பொறியியலாளர், காணி பாவிக்கும் பகுதித் தலைவர் |
| | காணி அபிவிருத்தித் திணைக்களம் .. | பிரதி அதிபர் |
| | பெருவீதிகள் திணைக்களம் .. | பிரதி அதிபர், பிரதான பொறியியலாளர், உதவி அதிபர் (பரிபாலனம்) |
| | இயந்திரசாதனத் திணைக்களம் .. | உதவி அதிபர், பரிபாலன உதவியாளர், கந்தோர் உதவியாளர், கணக்காளர், பொறிமுறைப் பொறியியலாளர் |
| | அரசாங்கத் தொழிற்சாலை .. | பொறியியல் கண்காணிப்பாளர், பரிபாலன உத்தியோகத்தர், வேலைகள் முகாமையாளர் |
| | பிராதேசிய ஆட்புல வேலைகள் பகுதி .. | பிரதி அதிபர், உதவி அதிபர், கண்காணிப்புப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர், பரிபாலன உத்தியோகத்தர் |
| (3) அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் அலுவலர் இடமாற்றங்களுக்குரிய தத்துவங்கள் | நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சின் அலுவலகமும் மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களும் | செயலாளர், மேலதிக செயலாளர் உதவி செயலாளர் (பரிபாலனம்) உதவி செயலாளர் (பிராதேசிய தாபனம்) |
| | பிராதேசிய ஆட்புல வேலைகள் பகுதி | |
| (4) திணைக்களங்களுக்குள் உள்ள அலுவலர்கள் இடமாற்றங்களுக்குரிய தத்துவங்கள் | அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் .. | திணைக்கள அதிபர், பிரதி திணைக்கள அதிபர், உதவி திணைக்கள அதிபர், பரிபாலன உத்தியோகத்தர் |
| (5) பிராதேசிய ஆட்புல வேலைகள் பகுதிகளின் அலுவலர்கள் (இணைந்த சேவையிலுள்ள அலுவலர்கள் தவிர்ந்த) இடமாற்றங்களுக்குரிய தத்துவங்கள் | பிராதேசிய ஆட்புல வேலைகள் பகுதி .. | வேலைகள் பகுதி அதிபர் |

மைத்திரிபால சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சர்.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
1975 ம் ஆண்டு மார்ச் மீ 3 ந உ.

4-95—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

# விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. பொ. மா. 1/75 கோதுமை மா

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

(173 ம் அத்தியாயமான்) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பொலன்னறுவை மாவட்ட உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சமரசிங்ககே விமல் சிறி அத்துல ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1974 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ம் திகதி வெளியான 130 ம் இலக்க ஸ்ரீ லங்கா குடியரசு வர்த்தமான பத்திரிகையில் பிரசுரமான 1974 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 09 ம் திகதியைக் கொண்ட பொ. மா 2/74 இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக அகற்றி விடுகிறேன்.

(2) இதனோடு இருக்கும் அட்டவணையின் 2 ம் பந்தியில் விபரிக்கப் பட்டிருக்கும் விலைகளையே 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களில் 112 நிகர இருத்தலில் ஆகக்கூடிய மொத்த விலை யாகுமென கட்டளையிடுகிறேன்.

(3) இதனோடு இருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் குறிக்கப்பட் டிருக்கும் விலைகளையே 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களில் நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலையாகு மென கட்டளையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 112 நிகர நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படு மென்றும் ;

(ஆ) 112 நிகர இருத்தல் நிறைக்குக் குறைவாக எத்தொகையை யும் பாவிப்பாளர்களுக்காக விற்கும் பொழுது அது சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) " கோதுமை மா " என்பது கோதுமை மாவும் சோளம் மாவும் சேர்ந்த கலவை மா ;

(ஈ) 112 நிகர இருத்தலுக்கு மேலான அல்லது அத்தொகைக்கு குறைந்த கோதுமை மாவை மொத்தமாக விற்குமிடத்து அதன் மொத்த விலையை 112 நிகர இருத்தல் மொத்த விலையின் சராசரி விலையின் படி கணிக்கப்படல் வேண்டும்.

(5) கோதுமை மாவுடன் சோளம் மாவைத் தவிர்ந்த வேறைய எப் பொருள்களுடனும் கலந்து விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகி றேன்.

(6) சோளம் மாவையும் கோதுமை மாவையும் கலந்து விற்கும் கலவையில் பத்து சதவீத அல்லது அதற்குட்பட்ட சோளம் மா மாத்திரமே அக்கலவையில் இருக்கலாமென ஆஞ்ஞையிடுகி றேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ் வொரு இடத்திலும் விபரிக்கப்பட்டிருக்கும் கோதுமை மாவைத் தமது வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்தி லாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப் பிட்ட கோதுமை மாவின் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்கு லத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாக பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாக பார்வைக்கு வைக்க வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ் வொரு இடத்திலும் கோதுமை மாவை விற்கும் ஒவ் வொருவருக்கும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அவ ருக்குப் பின் வருவனவற்றைக் குறித்து பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்று கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கோதுமை மாவின் தொகை (பாரத்தில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாக கருதப்படுமென்றும் கட்டளை யிடுகிறேன்.

(10) குறித்த அட்டவணையின், குறிக்கப்பட்டுள்ள கோதுமை மா விற்குமிடத்து அப்பொருளை சுற்றிக் கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்குமென்று கட்டளையிடுகிறேன்.

1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு பொலன்னறுவை கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டபிள்யூ. அத்துல,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
பொலன்னறுவை மாவட்டம்.

அட்டவணை 1—கூப்பனுக்கு மா

| பந்தி 1<br>இடம் | பந்தி 2<br>112 இருத்தல் கொண்ட கோதுமை மா விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை | பந்தி 3<br>ஒரு நிகர இருத் தல் கோதுமை மாவின் ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பொலன்னறுவை மாவட்டம் .. | 119 58 .. | 1 12 |

அட்டவணை 2—கூப்பனுக்கு அல்லாத மா

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>112 இருத்தல் கொண்ட கோதுமை மா விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை, | பத்தி 3<br>ஒரு நிகர இருத் தல் கோதுமை மாவின் ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பொலன்னறுவை மாவட்டம் .. | 123 90 .. | 1 12 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல, இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ் விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

*இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்*

*மாத்தளை இருப்புப் பாதைக் கடவை பழுதுபார்த்தல்*

கண்டி பேராதனை புகைவண்டி நிலையங்களுக்கிடையில் மாத்தளை இருப்புப் பாதையில் 3 மைல் 44 சங்கிலியில், கண்டியிலிருந்து தெய்யன்வலைக்குச் செல்லும் வண்டிப்பாதையின் மீது அமைந் துள்ள இருப்புப்பாதைக் கடவை 75.04.26 ஆந் திகதி 18.00 மணி தொடக்கம் 75.04.27 ஆந் திகதி 06.00 மணிவரை பழுதுபார்க்கப் படும்.

இவ்விதி 75.04.26 ஆந் திகதி 18.00 மணி தொடக்கம் 22.00 மணி வரையும் 75.04.27 ஆந் திகதி 04.00 மணி தொடக்கம் 06.00 மணி வரையும் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு ஓரளவு மூடப்பட் டிருக்கும், இக் காலங்களில் இக்கடவையின் ஊடாகப் போக்கு வரத்து நடைபெறுவதற்கு உதவி செய்யப்படும்.

இவ்விதி 75.04.26 ஆந் திகதி 22.00 மணி தொடக்கம் 75.04.27 ஆந் திகதி 04.00 மணிவரை முற்றாக மூடப்பட்டிருக்கும். முற்றாக மூடப்பட்டிருக்கும் இக் காலத்தில் சகல வாகனப் போக்குவரத்தும் கண்டி, கொழும்பு வீதியிலுள்ள சுதும்பொல இருப்புப்பாதைக் கடவையின் ஊடாகத் திருப்பப்படும்.

எஸ். அமரசூரிய,
பொது முகாமையாளருக்காக,
புகைவண்டித் திணைக்களம்.

4-12—0404..75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

### இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

### இருப்புப்பாதைக் கடவை பழுதுபார்த்தல்

புகைவண்டிப் பாதையில் 86 மைல் 02 சங்கிலியில் கட்டன்—தலவாக்கலை வீதியின் மீது கட்டன், கொட்டக்கலை புகைவண்டி நிலையங்களுக்கிடையில் பிரதான இருப்புப்பாதையில் 111 மைல் 01 சங்கிலியில் அமைந்துள்ள இருப்புப்பாதைக் கடவை 03.05.75 ஆந் திகதி 18.00 மணி தொடக்கம் 1975.05.04 ஆந் திகதி 06.00 மணி வரை பழுதுபார்க்கப்படும்.

இவ்வீதி 75.05.03 ஆந் திகதி 18.00 மணி தொடக்கம் 22.00 மணி வரை ஓரளவும் 75.05.03 ஆந் திகதி 22.00 மணி முதல் 75.05.04 ஆந் திகதி 06.00 மணிவரை முற்றாகவும் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு மூடப்பட்டிருக்கும்.

பிற வீதியெதுவுமில்லாததினால் மிக அவசரமான போக்குவரத்து இக் கடவையின் ஊடாகச் செல்லுவதற்கு அனுமதிக்கப்படும்.

எஸ். அமரசூரிய,
பொது முகாமையாளருக்காக,
புகைவண்டித் திணைக்களம்.

4-13—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### இலங்கைப் புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவை செப்பனிடுதல்

மாங்குளம் புகையிரத நிலைய எல்லைக்குள் வடபாதை 185 மைல்—46/47 சங்கிலியில் அமைந்துள்ள புகையிரதக் கடவை 29.04.75 பிற்பகல் 4.00 மணியிலிருந்து 30.04.75 காலை 7.00 மணிவரை செப்பனிடப்படும்.

திருத்த வேலைகள் நடைபெறும் நேரத்தில் வாகனப் போக்குவரத்துக்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

எஸ். அமரசூரிய,
புகையிரதப் பகுதி தலைமை அதிபருக்காக.

4-39—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணிமுதல் பி. ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "அப்பிறீம் கோட் புறொக்ரறால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | .. 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி .. | .. 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | ..220 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | ..440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கை குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | .. 46 0 | .. 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | .. 36 0 | .. 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | .. 43 50 | .. 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கால வெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை | தபாற்செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| (அ) | (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 0 50 .. | 0 20 |
| | (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 1 0 .. | 0 20 |
| (ஆ) | (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 30 .. | 0 15 |
| | (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 0 60 .. | 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்கரி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்டபிப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே .. .. | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

எல் டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு.*
*1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது